WORLD SAIVA COUNCIL (AUSTRALIA) INC.
உலக சைவப் பேரவை (அவுஸ்திரேலியா)
Postal Address: 6, Dudley Street, Auburn, NSW 2144
Tel: 0408 432 680 email: sabanathank@gmail.com

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-27

ஆசிரியர்: சைவப்புலவர் முரு.சேமகரன்

(கவிஞர் கல்லோடைக் கரன்)

27-05-2026

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-27, 27-05-2026

தொல்:சொல்: இயல் - 7 இடையியல்

முதலில் சென்ற வகுப்பிலிருந்து மேலதிக விளக்கம் :

வினையெஞ்சு கிளவிகள்/பெயரெஞ்சு கிளவிகள் எத்தனையோ உள்ளன. அவற்றை எல்லாம் குறிக்க இயலாமையால், அவற்றை இலகுவில் தெரிந்து கொள்ள, அவைபோலவே குறிக்கப் படும் சொல் வடிவங்களே 'வாய்பாடுகள்' ஆகும்.

நூற்பா 28 : செய் என்ற அடிப்படைக்குச் சொன்ன வாய்பாடுகள் இவை;

செய்து -- உண்டு

செய்யூ / செய்பூ-- தின்னூ, தின்பூ

செய்பு -- உண்ணுபு

செய்தென -- உண்ணென

உண்ணியர் -- செய்யியர், உண்ணிய -- செய்யிய

உணின் -- செயின், உண்ண -- செய

உணற்கு -- செயற்கு

இவை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி.

நூற்பா 234:

பெயரெஞ்சு கிளவி :

செய்யும், செய்த இரண்டும் பெயரெச்ச வாய்பாடுகள். இவை, நிலம் பொருள் காலம் கருவி வினைமுதல் வினை எனும் 6 பெயர்களைக் கொண்டு முடியும்.

வாழும் ஊர் -- நிலம். விளையும் பயிர் -- பொருள்.

துயிலும் நேரம் -- காலம். எழுதும் கோல் -- கருவி.

படிக்கும் மாணவன் -- வினைமுதல்.

உண்ணும் உணவு -- வினை

(இவை ஆறும் 'செய்யும்' என்ற வாய்பாடு)

படித்த பள்ளி -- நிலம்

உண்ட சோறு -- பொருள்

வந்த நாள் -- காலம்

எய்த வேல் -- கருவி

ஆடிய கூத்தன் -- வினைமுதல்.

கூடிய கூட்டம் -- வினை

(இவை ஆறும் 'செய்த' என்ற வாய்பாடு)

இடையியல் - 7:

பெயர்ச் சொற்களோடும் வினைச் சொற்களோடும் சார்ந்து நின்று, தனக்கென்று பொருளேதுமின்றி, அந்தந்தவிடத்துப் பொருள் தருவது **'இடைச்சொல்'** ஆகும்.

சொற்களின் முன்னும் பின்னும் நிற்கும். இடையில் நிற்பதே பெரும்பான்மை என்றதால் **'இடைச்சொல்'** என்றானது.

இடைச்சொற்கள் தனித்தியங்கா. பெயர் வினைகளையே சார்ந்து, இடை என்ற இடத்தில் நிற்பதால் 'இடைச் சொல்' என்கிறார் தெய்வச் சிலையார்.

நன்னூல் உரையாசிரியர்களில் ஒருவரான சங்கர நமச் சிவாயர் "பெயர்ச் சொல்லுமாகாது, வினைச் சொல்லுமாகாது", இரண்டின் வேறுமாகாமல், இடை நிற்பதால் 'இடைச்சொல்' ஆயிற்று என்றார்.

எ-டு:

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" (வள்ளுவன், 1081)

அப்பரடிகளின் விடந்தீர்த்த பதிகம் இது:,
ஒன்று கொல்ஆம் அவர் சிந்தை உயர்வதை
ஒன்று கொல்ஆம் உயரும் மதி சூடுவர்
ஒன்று கொல்ஆம் இடுவெண் தலை கையது
ஒன்று கொல்ஆம் அவர் ஊர்வது தானே
(தொடர்ந்து 9 பாடல்களிலும் 36 தடவைகள் 'கொல்' என்ற இடைச்சொல் வருவது காண்க. இவ்விடம் ஐயப் பொருளில் வந்தது)

2

மேலும் பல இடைச் சொற்களைக் குறித்துள்ளார். இவற்றை நூற்பாவை மனங்கொண்டு உணர்ந்து கொள்க!

மன் இல் கொன் உம் ஓ ஏ மற்று எற்று மன்ற எல் ஆர் குரை மா இரும் சின் அம்ம ஆங்க யா கா ஆக ஆகல் ஔ எனா என்றா எனப் பலவாம்.

3 'உம்' என்ற இடைச்சொல் அமையும் விதம்.

"எச்சஞ் சிறப்பே ஐயம் எதிர்மறை
முற்றே எண்ணே தெரிநிலை யாக்கமென்று
அப்பா லெட்டே உம்மைச் சொல்லே" (255)

இ-ள்: உம் என்ற இடைச்சொல் எட்டு வகை எ-று
1 எச்சவும்மை, 2 சிறப்பும்மை, 3 ஐயவும்மை
4 எதிர்மறைஉம்மை, 5 முற்றும்மை, 6 எண்ணும்மை
7 தெரிநிலையும்மை, 8 ஆக்கவும்மை

தமிழ் மொழி/யாப்பு இலக்கண வகுப்பு-27 27-05-2026

தொல்:சொல்: இயல் - 7 இடையியல்

எ-டு:

இலக்குவனும் வந்தான் - எச்சவும்மை

கற்றோரும் ஏத்தும் கலி - சிறப்பும்மை

இன்றேனும் நாளையேனும் தருவான் - ஐயவும்மை

வாசன் செய்வதற்கும் உரியன் - எதிர்மறையும்மை

பாண்டவர் ஐவரும் வந்தனர் - முற்றும்மை

நிலமும் நீரும் தீயும் வளியும் வெளியும் எனப் பூதங்கள் ஐந்து - எண்ணும்மை

அவளும் அல்லள் இவளும் அல்லள் - தெரிநிலையும்மை

மெலியவன் வலியவனும் ஆனான் -- ஆக்கவும்மை

4

ஓ என்ற இடைச் சொல்லின் பயன்பாடு:

"பிரிநிலை வினாவே எதிர்மறை ஒழியிசை
தெரிநிலைக் கிளவி சிறப்பொடு தொகைஇ
இருமூன் றென்ப ஓகாரம்மே" (256)

இ-ள்:

பிரிநிலை, வினா, எதிர்மறை, ஒழியிசை, தெரிநிலை, சிறப்பு ஆகிய பொருளில் வரும் **ஓகார இடைச்சொல் ஆறு** வகைத்தாம் எ-று

எ-டு:

கோவலனோ கொண்டான்? -- பிரிநிலை ஓகாரம்

நாதன் உண்டானோ? வினா ஓகாரம்

அவனோ சொற் கேட்பான்? -- எதிர்மறை ஓகாரம்

வேலை செய்யவோ வந்தாய்? -- ஒழியிசை ஓகாரம்

உன் சிந்தை நன்றோ தீதோ? அல்ல -- தெரிநிலை ஓகாரம்

ஓ ஓ கம்பன் கல்வியிற் பெரியன் -- சிறப்பு ஓகாரம்

கம்பன் தனிப்பாடல் ஒன்று :

"மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ
உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்? -- என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு"

-- வகுப்பு 27 நிறைவு --

ஐயம் தெளிதல்